சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 08.03.2019

அவசரக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் மாசி மாதம் 24–ம் நாள் (மார்ச் திங்கள் 08–ம் நாள்:–08.03.2019) வெள்ளிக் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.01**

சின்னமனூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பதிவேடுகள், இரசீது புத்தகங்கள், எழுது பொருட்கள் அனைத்தும் வாங்கவும் 2019–2020 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4081/2017/பி2).**

**தீர்மான எண், நாள்** **616 , நாள்.08.03.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.02**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டு தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வழிகாட்டுதல்படி 37 தற்காலிக பணியாளர்களை 6 குழுக்களாக பிரித்து குழு ஒன்றிக்கு 6 நபர்கள் வீதம் DBC பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளலாம் என அறிவுறுத்தியதற்கிணங்க இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டு 37 பணியாளர்களை களப்பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி திரு.ஆர்.பரமானந்தன் என்ற ஒப்பந்ததாரருக்கு 17.04.2018 முதல் 16.04.2019 முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.250/– என்ற தொகைக்கு பணி உத்திரவு வழங்கப்பட்ட ஒப்பந்த காலம் முடிவடையவுள்ளது. 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதால் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுத்து பொது சுகாதார நலன் காக்கும் பொருட்டு துப்புரவு அலுவலர் அவர்களின் அறிக்கையின்படி, மேலும் ஓராண்டு காலத்திற்கு 2018–2019ம் ஆண்டிற்கு வழங்கிய அதே தொகைக்கு 37 பணியாளர்கள் DBC பணியினை மேற்கொள்ள ஒப்பந்த நீட்டிப்பு செய்து ஒப்பந்தக்காரார் திரு.ஆர்.பரமானந்தன் என்பவருக்கே அன்னாரின் ஒப்புதல் கடிதத்தின்படி பணி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மேற்படி செலவினத்தை 2019–2020ம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.**

**2. நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளதாலும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்க போதிய கால அவகாசம் இல்லை என்பதாலும், குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரினாலும் சென்ற ஆண்டைவிட கூடுதல் தொகைக்கு வழங்க வேண்டிய நிலைதான் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு, ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் சம்மதக் கடிதம் மற்றும் துப்புரவு அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில் 17.04.2019 முதல் மேலும் ஓராண்டு காலத்திற்கு பணியினை நீட்டிப்பு செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0680/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **617 , நாள்.08.03.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.03

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகளை வீடு வீடாக சென்று பிரித்து வாங்குதல், தெரு கூட்டல், வடிகால் சுத்தம் செய்தல், சாக்கடை சுத்தம் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாத சூழலில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் **31.08.2016**ம் நாளிட்ட ந.க.எண்.**21085/பி3/2016** எண் கடிதத்தில் **50** தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியலின்படி வழங்க உத்திரவு பிறப்பித்ததை தொடர்ந்து இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் **50** தனியார் துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி திரு.ஆர்.பரமானந்தன் என்ற ஒப்பந்ததாரருக்கு **01.04.2018** முதல் **31.03.2019** வரை உள்ள ஓராண்டு காலத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு ஒப்பந்த காலம் முடிவடைய உள்ளது. ஆனால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் வழங்கிய மேற்கண்ட உத்திரவு **31.07.2019** வரையிலான காலங்களுக்கு அனுமதி உள்ளதாலும், மேலும் **2019**ம் ஆண்டிற்கான நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெற உள்ளதால், பொது சுகாதார நலன் கருதி துப்புரவு அலுவலர் அவர்களின் அறிக்கையின்படியும், மேலும் **01.04.2019** முதல் **31.03.2020** வரையிலான **12** மாதங்களுக்கு **2018–2019**ம் ஆண்டிற்கு வழங்கிய நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.**394/–** வீதம் மேற்கண்ட பணியினை நீட்டிப்பு செய்து ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் என்பவருக்கே அன்னாரின் ஒப்புதல் கடிதத்தின்படி பணி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.**<br>**2. நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெற உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்க போதிய கால அவகாசம் இல்லை என்பதாலும் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோரினாலும் சென்ற ஆண்டு தொகையினை விட கூடுதல் தொகைக்கு வழங்க வேண்டிய நிலை தான் ஏற்படும் என்பதை உத்தேசித்தும், ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் சம்மதக் கடிதம் மற்றும் துப்புரவு அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில் 01.04.2019 முதல் 31.03.2020 வரை 12 மாதங்கள் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0576/2015/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **618 , நாள்.08.03.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

## பொருள் எண்.04

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள குடிநீர் குழாய் இணைப்புகளில் காலம் கடந்து நிலுவைத் தொகை உள்ளது. அவற்றில் குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு பலமுறை அறிவிப்புகள் வழங்கப்பட்டும், வருவாய் உதவியாளர்கள் மற்றும் குழாய் பொருத்துநர்கள் நேரடியாக சென்று வரி விதிப்பாளர்களை அணுகியும் குடிநீர் குழாய் இணைப்புதாரர்கள் நாளது தேதி வரை தொகை செலுத்தப்படவில்லை. மேலும் குடிநீர் குழாய் இணைப்புகள் துண்டிப்பு செய்யப்பட்டு சுமார் 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. துண்டிப்பு செய்யப்பட்ட குழாய் இணைப்புகளுக்கு தொடர்ந்து நிலுவை கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது. நிலுவை கேட்புப் பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | குழாய் எண். | பெயர் | கதவு எண். | முகவரி | தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2336 | S.நடராஜன், BABL., | 1/3 | காலனி வடக்குத் தெரு | 2650.00 |
| 2 | 302 | N.K.நல்லையன் | | | 4440.00 |
| 3 | 379 | AMIP.முகமது | | | 2880.00 |
| 4 | 2479 | குமார் (எ) முத்து சீனிவாசன் | 208 | முத்தாலம்மன் கோவில் தெரு | 2226.00 |
| 5 | 1341 | சௌந்தரராஜன் | 4 | சேக்மைதீன் தெரு | 1218.00 |
| 6 | 618 | MMJ.வன்னியராஜன் | 87 | மெயின் ரோடு | 8376.00 |
| 7 | 1265 | RMS.வேல்சாமி | 326A | மெயின் ரோடு | 6466.00 |
| 8 | 613 | காமாட்சி மூர்த்தி | 276 | மெயின் ரோடு | 920.00 |
| 9 | 2905 | குருசாமி செட்டியார் | | | 185.00 |
| 10 | 868 | K.ஸ்ரீரங்கன் | 23 | மொட்டைசாவடி தெரு | 1440.00 |
| 11 | 537 | காமாட்சி மூர்த்தி | 22 | CMC தெரு | 874.00 |
| 12 | 2263 | OTPM.நாகரத்தினநாடார் | 69 | சீப்பாலக்கோட்டை ரோடு | 8608.00 |
| 13 | 190 | K.காமாட்சி பிள்ளை | 31 | உப்பு கிணறு தெரு | 1200.00 |
| 14 | 1036 | A.சேக்முகமது, A.ஹைதர்அலி | 7 | ராஜா ரைஸ்மில் தெரு | 13875.00 |
| 15 | 2033 | அய்யாத்துரை | 24 | புது கிணறு தெரு | 966.00 |
| 16 | 2117 | சுருளி | 65 | காண்ட்ராக்டர் பழனியாண்டி தெரு | 4448.00 |
| 17 | 914 | K.அப்துல்காதர் மைதீன் | 13 | MMG ரைஸ்மில் தெரு | 6560.00 |
| 18 | 2341 | K.சக்திவேலம்மாள், K.ராக்கம்மாள் | 45D | பழைய பாளையம் ரோடு | 2810.00 |
| 19 | 1599 | V.பெரிய அய்யணத் தேவர் | 51 | வேலு தெரு | 924.00 |
| 20 | 1943 | S.சங்குத் தேவர் | 45 | பத்மநாபசாமி தெரு | 2535.00 |

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2030/1996/இ2)**

**தீர்மான எண், நாள்** **619 , நாள்.08.03.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.05

சின்னமனூர் நகராட்சியின் கீழ் இயங்கி வரும் பாதாள சாக்கடை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய உரிமம் 31.03.2019 ம் அன்றுடன் முடிவடைகிறது. உரிமம் புதுப்பித்தலுக்கான அறிவிப்பு கடிதம் தமிழ்நாடு சுற்றுச் சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தேனி அவர்களின் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. வருகின்ற 2019–2020க்கான உரிமம் புதுப்பித்தல் தொகை ரூ.43600/–க்கு வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட தொகையை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்துக்கு செலுத்த மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மேற்கண்ட செலவினத்தை செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.**
**3.மேற்கண்ட செலவினத்தை பாதாள சாக்கடை நிதியில் இருந்து ஈடு செய்யலாம். (ந.க.எண்.4229/2002/இ1)**

**தீர்மான எண், நாள்** **620 , நாள்.08.03.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.06

<u>2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்</u>

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306(28A) ன் படியும், 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (Use and throwaway plastic) சேகரித்தல் (Storage) வழங்குதல் (Supply) கொண்டு செல்லுதல் (Transport) விற்பனை செய்தல் (Sale) மற்றும் பகிர்ந்தளித்தல் (Distribution) ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துறை விதிகளை மீறுகின்ற நபருக்கு கீழ்கண்டவாறு அபராதம் விதிக்கவும் துணை விதிகள் ஏற்படுத்தலாம். மேலும் விளம்பரம் செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. (i) **<u>செயலாக்க அதிகாரி</u>**: நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.

   (ii) **<u>ஆய்வு நடத்தும் அதிகாரி</u>**: ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், நகர்நல அலுவலர் அல்லது துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

   (iii) **<u>மேல்முறையீட்டு அலுவலர்</u>**: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

(iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்:**
இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே(Spot fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும்.

2 **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :**

I. மொத்தமாக (Whole sale)
சேமித்தல்/வழஙகுதல்/கொண்டு செல்லுதல்/ விற்பனை செய்தல்/பகிர்ந்தளித்தல்

II. வணிக வளாகஙகள், துணிக்கடைகள் பல்பொருள் அஙகாடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூாரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.

III. மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,

**IV.** சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.

3. **இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்:-**
இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.
துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர்

4. **அட்டவணை II-ல் குறிப்பிட்டபடி அபராத தொகை** கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

5. **மேல் முறையீட்டுக்கு உரிமை:-**
**சின்னமனூர்** நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் **சின்னமனூர்** நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

6.தண்டனைகள் விபரம்:-

**அட்டவணை II**

பிரிவு 306 **(28-A)**-ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| i. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 |
| ii | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 20000 |
| iii. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000 | 2000 | 5000 |
| iv 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 |

**அலுவலகக் குறிப்பு:–    மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3378/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்    621 , நாள்.08.03.2019**
**தீர்மானம்    அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.07

இந்நகராட்சிக்குச் சொந்தமான பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள வணிக வளாகத்தின் வடக்கு பக்கம் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு **01.04.2019** முதல் **31.03.2022** வரை **08.03.2019**ம் அன்று நடைபெற்ற பொது ஏலும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முன் வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை.

மேற்கண்ட இனத்திற்கு கீழ்காணும் விவரப்படி முன் வைப்புத் தொகை செலுத்தி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளன. மேற்படி, ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக் கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1. | மா.பால்பாண்டி, த/பெ.மாயாண்டித் தேவர்,<br>பண்ணைப்பட்டி, உசிலம்பட்டி போஸ்ட்,<br>மதுரை மாவட்டம். | ரூ.292000/– |
| 2. | க.தனசீலன், த/பெ.கருத்தப்பாண்டி,<br>குமரன்பட்டி, காளப்பன்பட்டி போஸ்ட்,<br>பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம். | ரூ.250000/– |

**அலுவலகக் குறிப்பு:–** **ஏல இனத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், வரிசை எண்.1–இன்படி, மா.பால்பாண்டி, த/பெ.மாயாண்டித் தேவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச தொகை ரூ.292000/– கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.1445/– (292000–290555=1445/–) கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை ஊர்ஜிதம் செய்யலாம். (ந.க.எண்.5431/2017/அ2).**

**தீர்மான எண், நாள்** 622 , நாள்.08.03.2019

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.08

இந்நகராட்சிக்குச் சொந்தமான நேருஜி பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு பேருந்திற்கு ரூ.12/– வீதம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு **01.04.2019** முதல் **31.03.2022** வரை **08.03.2019**ம் அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முன் வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை.

மேற்கண்ட இனத்திற்கு கீழ்காணும் விவரப்படி முன் வைப்புத் தொகை செலுத்தி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளன. மேற்படி, ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக் கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1. | மா.பால்பாண்டி, த/பெ.மாயாண்டித் தேவர், பண்ணைப்பட்டி, உசிலம்பட்டி போஸ்ட், மதுரை மாவட்டம். | ரூ.540000/– |
| 2. | க.தனசீலன், த/பெ.கருத்தப்பாண்டி, குமரன்பட்டி, காளப்பன்பட்டி போஸ்ட், பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம். | ரூ.500000/– |

அலுவலகக் குறிப்பு:– **ஏல இனத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், வரிசை எண்.1–இன்படி மா.பால்பாண்டி, த/பெ.மாயாண்டித் தேவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச தொகை ரூ.540000/– கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.131141/– (540000–408859=131141) கூடுதலாகவும் கடந்த ஆண்டு உரிமத் தொகையைக் காட்டிலும் ரூ.122000/– (540000–428000=122000) கூடுதலாகவும் உள்ளதால் மன்றம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியினை ஊர்ஜிதம் செய்யலாம். (நக.எண்.5431/2017/அ2).**

**தீர்மான எண், நாள்** **623 , நாள்.08.03.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.09**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் ஆழ்துளைக் கிணறு, நீர் உறிஞ்சும் கிணறுகள் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யும் இடங்களில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யவும், நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வால்வுகள் பராமரிக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

**1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதை ஏற்கலாம்.**

**3. நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் பணியின் முக்கியத்துவம் கருதி அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு உள்ளூர் கடைகளின் விலைப்புள்ளி பெற்று குறைவான விலைப்புள்ளிக்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **624 , நாள்.08.03.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN60S2751—க்கு **18.02.2019**ம் அன்று மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களை அழைத்து வரும் வழியில் பழுதடைந்துவிட்டது. மேற்படி பழுதினை நீக்கம் செய்யும் பணிக்கு ஆன செலவு ரூ.**7186/—**ஐ வழங்கவும், மேற்படி பணியினை மதுரை T.V.சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் (பி) லிட் நிறுவனத்தில் மேற்கொண்டமைக்கு அனுமதியும், மேற்படி தொகையினை அவசர பணி நிமித்தம் ஒட்டுனர் திரு.சி.ராமையா என்பவர் வழங்கியதால், செலவு தொகையினை அன்னாருக்கு வழங்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **625 , நாள்.08.03.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.11

சின்னமனூர் நகராட்சி நகரமைப்பு பிரிவு மூலம் தற்போது வசூலிக்கப்பட்டு வரும் கட்டிட உரிமக் கட்டணம், மனைப் பிரிவு கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை கடந்த ஏழு ஆண்டுகளுக்கு மேலாக மாற்றம் செய்யப்படாமல் உள்ளதாலும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019–ல் கட்டிட உரிமக் காலம் ஏற்கனவே இருந்த 3 ஆண்டுகள் என்பதை ஐந்து ஆண்டுகளாக நீடிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், மேலும் நகராட்சியில் நிர்வாக செலவினங்கள் அதிகரித்து வருவதாலும், மேற்கண்ட கட்டணங்கள் திருத்தியமைக்க வேண்டிய அவசியமாகிறது.

ஆகவே கீழ்க்கண்டவாறு சின்னமனூர் நகராட்சியில் திருத்தியமைக்கப்பட்ட புதிய கட்டிடங்களை 01.04.2019 ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவுகள் | காரியம் அல்லது தொழிலின் பெயர் | வகை விவரம் மீட்டரில் | காலம் | பழைய கட்டண விகிதம் | புதிய கட்டண விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | மனைப் பிரிவு அங்கீகரிக்கப்பட்ட<br>அ.குடிசை நீங்கலாக குடியிருப்பு வீடுகட்ட | 0–100 ச.மீ வரை<br>100–500 ச.மீ வரை<br>500 ச.மீ மேல் | 5 வருடங்கள் | | 1000/–<br>1500/–<br>2000/– |
| | | ஆ.குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்ட | 0–100 ச.மீ வரை<br>100–500 ச.மீ வரை<br>500 ச.மீ மேல் | 5 வருடங்கள் | | 2000/–<br>3000/–<br>4000/– |
| 1. | 175, 176 | ஒரு நிலத்தையோ அதன் பாகத்தையோ மனைப்பிரிவாக பிரித்துக் கொள்வதற்கு | ஒரு ஹெக்டேர் அதன் பாகத்திற்கு | ஒரு தடவை மட்டும் | 5000/– | 5000/– |
| | | | கூடுதல் ஒவ்வொரு 0.5 ஹெக்டெருக்கும் | ஒரு தடவை மட்டும் | 1000/– | 1000/– |
| 2. | 197 (1) & 200 | அனுமுதிக்கப்பட்ட எந்த மனைப்பிரிவிற்கு பொது அல்லது சொந்த தெருவை நோக்கி உள்ளதுமான இடத்தில் கட்டிடம் கட்டிக் கொள்வதற்கு மனை அங்கீகாரம் செய்ய | மனை ஒன்றுக்கு | ஒரு தடவை மட்டும் | 1000/– | 1000/– |
| 3. | 197, 201 & 215 | குடிசை நீங்கலா புதுக்கட்டிடம் கட்டவோ புதுப்பித்துக் கட்டவோ மாறுதல் செய்து கட்டவோ அனுமதி | | | | |
| | | 1) குடியிருப்புக் கட்டிடம் (Residential)<br>ஆர்.சி.சி அல்லது லாகடக் கட்டிடம்<br>அ).தரைதளம்<br>ஆ).முதல தளம்<br>இ) இரண்டாம் தளம்<br>ஈ) கூடுதல் தளங்களுக்கு | 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடங்கள் | 200/–<br>250/–<br>–<br>– | 300/–<br>350/–<br>600/–<br>900/– |
| | | தரைதளம் | | | | |
| | | உ) ஒரு, தகரம், சிமிண்ட் தகர கட்டிடம்<br>அ). தரைதளம்<br>ஆ). முதல்தளம் / அதன் மேல் ஒவ்வொரு தளத்திற்கும் | 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடங்கள் | 100/–<br>150/– | 200/–<br>250/– |
| | | 2. குடியிருப்பு அல்லாத கட்டிடம் (Non Residential)<br>1. ஆர்.சி.சி அல்லது லாகடக் கட்டிடம் | 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடங்கள் | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | அ).தரைதளம்<br>ஆ).முதல்தளம்<br>இ) இரண்டாம் தளம்<br>ஈ) கூடுதல் தளங்களுக்கு | | | 500/–<br>–<br>–<br>– | 550/–<br>800/–<br>1100/–<br>1500/– |
| | | 2.தகரம், சிமிண்ட், தகடு | 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடங்கள் | 200/– | 300/– |
| | | 3. சுற்றுச் சுவர் கட்ட | 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடங்கள் | 200/– | 300/– |
| | | 4. சுற்றுச் சுவர் (மண்) அல்லது வேலி போட | 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடங்கள் | 100/– | 200/– |
| | | 5. மல அறை, குளியல் அறை கட்டுவதற்கு | முக்கிய கட்டிடத்துடன் கூடியது, தனியாக ஒவ்வொன்றுக்கும் | 5 வருடங்கள் | 100/– | 200/– |
| | | 6. செப்டிக் டாங்க் 1க்கு | முக்கிய கட்டிடத்துடன் தனியாக | 5 வருடங்கள் | 150/– | 300/– |
| | | 7. மாடிப் படிக்கட்டு 1க்கு | முக்கிய கட்டிடத்துடன் தனியாக | 5 வருடங்கள் | 200/– | 300/– |
| | | 8. பழைய சுவர்களை கொத்தி பூச அல்லது தளம் போட அல்லது இது போன்ற சில்லறை மராமத்து வேலைகளுக்கு<br>1).தரைதளம்<br>2) முதல் தளம்<br>(10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு) | ஒரு தடவை மட்டும் | 5 வருடம் | –<br>– | 200/–<br>300/– |
| | | அபிவிருத்திக் கட்டணம் | 1 ச.மீட்டர் | 5 வருடம் | 5/– | 10/– |
| | | குடியிருப்பு கட்டணம் | 10 ச.மீட்டருக்கு | 5 வருடம் | 50/– | 100/– |
| | | குடியிருப்பில்லாத கட்டணம் மொத்த நிலங்களுக்கு | 10 ச.மீட்டருக்கு<br>1 ச.மீட்டருக்கு | 5 வருடம் | 100/–<br>5/– | 200/–<br>10/– |
| | | 9. அனுமதியற்ற கட்டுமான அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தால் | மொத்த தொகையில் 50% கூடுதலாக செலுத்தப்பட வேண்டும். | | | |
| 4. | 207 | குழாய் கிணறு, குழிக்கிணறு போன்ற எவ்வகை கிணறு அமைக்க | ஒவ்வொன்றுக்கும் | 5 வருடம் | 1000/– | 1500/– |
| 5. | 207 | குடிசைகள் கட்ட, புதுப்பிக்க 20 ச.மீட்டர் பாகத்திற்கும் குறைவாக | ஒவ்வொரு 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கும் | 5 வருடம் | 100/– | 200/– |
| 6 | 217 (2) | அ) தற்காலிக குடிசை அல்லது கொட்டகை அல்லது செட் போட | 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கும் | 5 வருடம் | 60/– | 200/– |
| | | ஆ) அனுமதி வழங்கப்பட்ட கட்டிட வரைபடங்களுக்கு உண்மை நகல்கள் வழங்க | நகல் ஒன்றுக்கு | – | 300/– | 400/– |
| 7 | 197, 201& 215 | 1. நிரந்தர திரையரங்கு கட்டிக் கொள்ள தடையில்லாச் சான்று வழங்க | இனம் ஒன்றுக்கு | ஒரே தடவை மட்டும் | 10000/– | 15000/– |
| | | 2. திரையரங்கு கட்டிக் கொள்ள தடையில்லாச் சான்று வழங்க | இனம் ஒன்றுக்கு | ஒரே தடவை மட்டும் | 10000/– | 15000/– |
| | | 3. சர்க்கஸ் கொட்டகை அமைத்துக் கொள்ள | இனம் ஒன்றுக்கு | மாதம் ஒன்றுக்கு | 15000/– | 16000/– |
| | | 4. நகரமைப்பு திட்ட பாதிப்பு இல்லையெனச் சான்று வழங்க | இனம் ஒன்றுக்கு | ஒரே தடவை மட்டும் | 8000/– | 9000/– |
| | | 5. கட்டிட முடிவுச் சான்றிதழ் வழங்க | இனம் ஒன்றுக்கு | ஒரே தடவை | 1500/– | 2000/– |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மட்டும் | | |
| | | 6.மனைப்பிரிவு வரைபட நகல் வழங்க | இனம் ஒன்றுக்கு | ஒரே தடவை மட்டும் | 500/– | 500/– |
| | | 7.கட்டிட பட வரைவாளர் உரிமம் பதிவு செய்தல் | | ஐந்து ஆண்டுகள் | 1000/– | 5000/– |
| | | 8. கட்டிட பட வரைவாளர் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் | | உரிமம் அனுமதி காலம் ஐந்து ஆண்டுகள் | 1000/– | 5000/– |
| | | 9. அத்துமால் அளந்து காட்ட | | ஒரு தடவை (ஒரு சர்வே எண் வீதம்) | 100/– | 200/– |
| | | 10. நகரளவு வரைபடம் சிட்டா அடங்கல் வாங்க | | ஒரு தடவை (ஒரு சர்வே எண் வீதம்) | 100/– | 200/– |
| | | 11. கட்டிட இடுபாடுகள் மற்றும் கட்டிட சாமான்கள் தெருவின் ஓரம் குவித்து வைக்க | | ஒரு தடவை மட்டும் | | 500/– |
| | பிரிவு 6 வீடியோ படம் | 1. வீடியோ நூலகம் அமைக்க தடையில்லாச் சான்று வழங்க | இனம் ஒன்றுக்கு | ஒரே தடவை மட்டும் | 5000/– | 5000/– |
| | | 2. வீடியோ தியேட்டர் அமைக்க தடையில்லா சான்று வழங்க | இனம் ஒன்றுக்கு | ஒரு தடவை மட்டும் | 10000/– | 10000/– |

<u>குறிப்பு:-</u>

1. நகராட்சியின் முன் அனுமதியின்றி துவக்கப்படும் ஒவ்வொரு கட்டுமானத்திற்கும் மாறுதல்கள் கூடுதல், புதுப்பித்தல் உட்பட அனைத்து கட்டிடங்களுக்கும் செலுத்த வேண்டிய மொத்த உரிமையாணைக் கட்டணத்துடன் 50%/
2. கட்டிட அனுமதிக் காலம் முடிவடைவதற்கு முன்பாக கட்டிடம் கட்டி முடிக்கப்படவேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில் கால நீட்டிப்புக் காலம் முடிவடைவதற்குள் புதுப்பித்தல் கட்டணத்தை செலுத்தி 3 ஆண்டுகள் கால நீட்டிப்பு செய்து கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மேற்கண்ட புதிய கட்டணத்தை 01.04.2019 ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட புதிய கட்டிட அனுமதி கட்டண விவரங்களை விளம்பரப்படுத்த மற்றும் மாவட்ட அரசிதழில் வெளியிடும் உத்தேச செலவினங்களுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண், நாள்** 626 , நாள்.08.03.2019

**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் **2019,** விதி எண்.**30(1)**ல் குறிப்பிட்டபடி ஒவ்வொரு நகராட்சி பகுதிகளிலும் தொடர் கட்டுமான பகுதிகளை (Continuous Building area) கண்டறியப்பட்டு நகரளவு எண்கள் மற்றும் தேவையான விவரங்களுடன் தயார் செய்து **08.03.2019**க்குள் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பும்படி தெரிவித்து வந்துள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் **05.03.2019**ஆம் தேதிய ந.க.எண்.**31159/2018/**டிபி**3** சுற்றறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் கீழ்கண்ட பட்டியல் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**தொடர்கட்டுமான பகுதிகள் (CBA)**

| வ.எண் | அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்/ முழுமைத் திட்டம் | வார்டு எண். | சர்வே எண்கள் |
|---|---|---|---|
| 1. | முழுமைத் திட்டம் | 1 | 438/2pt, 455/1pt, 454/1pt, 453/2pt, 454, 455, 452, 455/1, 452/1, 505/1, 505, 453/2, 451 |
| 2. | முழுமைத் திட்டம் | 2 | 1491, 1492, 1493பா, 537பா, 544, 551பா, 577b, 550b, 545/2pt, 578/1pt, 528/1b, 579/1b, 549/2pt, 545/b, 553, 551/1b, 579/1b, 549/2pt, 545b, 553, 551, 518/1, 532, 578/1, 584, 552, 309, 517, 576, 584, 574, 584, 542, 309, 540, 531, 592, 554, 532/4a, 543, 543/2,3, 317/1c, 317, 541, 541/1a, 545/1a, 546, 538, 538/1b2, 345/2, 345, 545, 545/1d, 574, 75/3, 75, 552, 552/2a, 517/2a, 517/3a, 517, 552/2b, 583, 583/p, 552/2, 549, 576, 584, 584/3a, 549, 550, 532, 532/4a, 532, 547/1, 547, 538, 538/5b2, 578, 578/2a, 543, 543/1, 2, 128, 128/1, 557, 557/1p, 541/1, 541, 532, 578/1, 307, 553, 295, 545, 545/2, 518, 519 |
| 3. | முழுமைத் திட்டம் | 3 | 568, 561, 561/1, 555/3a1, 567, 556/1,2, 556, 552/2a9b, 556/3a, 557, 343, 552, 562, 557, 567, 553, 556/3a1, 556, 562, 562/3, 555, 555/2, 556/1,2, 552/2a, 553, 554, 566/1, 560/1, 577, 568/1b, 556/3a1b, 586/1b |
| 4. | முழுமைத் திட்டம் | 4 | 554/b, 577/1ap, 568/1b, 522b, 307/1ab, 342/1b, 342/4b, 342, 343, 343/7b, 307/1ab, 344/1b, 344/3b, 343/4,7b, 344, 343/7, 343, 325, 574, 307, 307/2a3, 318, 318/2, 566, 566/2, 317, 317/1, 342/6, 342, 563/3, 563, 571, 571/1, 316/1a, 316, 319/1, 319, 324, 323/2, 323, 324, 129/1, 335/14, 335, 336, 336/1,2, 307, 307/4a1, 342/1, 342, 326/1, 326, 307, 307/1, 306, 306/1,2, 336/1, 565, 565/1, 337/6, 337, 129/18, 557, 557/3, 355, 355/1a, 193/8a, 194/2a, 193, 194, 572, 318, 556, 315, 315p, 307/4, 129/7, 129, 325, 337, 318, 556/1,2, 307/4, 562/3, 562, 571/1a, 571, 307/2a3, 307/2, 322, 322/1, 328/1b, 307/3, 566, 566/2, 575, 574, 576, 316, 527, 320, 556, 552 |
| 5. | முழுமைத் திட்டம் | 5 | 1492/2, 1493/pt, 590/1a1a, 586/2, 585/1a, 579, 583, 578, 585, 585/1, 583, 576/1, 576, 583, 574, 576, 583, 574, 576, 549, 575, 579 |

| | | | |
|---|---|---|---|
| 6. | முழுமைத் திட்டம் | 6 | 590/1a1ab, 588/2b, 588, 587, 587/1, 558 |
| 7. | முழுமைத் திட்டம் | 7 | 590/1A1Ab, 324, 541 |
| 8. | முழுமைத் திட்டம் | 8 | 587/1,2,b, 588/1,2, 590/1A1Ab, 586 |
| 9. | முழுமைத் திட்டம் | 9 | 590/1A1Ab, 590/1Ab, 1036/1B, 598, 592, 122/16, 122, 819, 819/2A, 591 |
| 10. | முழுமைத் திட்டம் | 10 | 590/1A1Ab, 513, 513/1Ab, 204/3, 204, 182/5, 182, 511, 178/1, 569, 609 |
| 11. | முழுமைத் திட்டம் | 11 | 590/1A1AB, 324, 273, 273/14, 543/1, 543/5, 78/1, 578, 543, 267, 190, 573 |
| 12. | முழுமைத் திட்டம் | 12 | 590/1a1Ab, 318, 319, 146, 147, 147/3 |
| 13. | முழுமைத் திட்டம் | 13 | 590/1A1Ab, 505/3, 307/2b, 561 |
| 14. | முழுமைத் திட்டம் | 14 | 306/9, 307/4A2Cb, 314/1B, 308/b, 2B, 305/b, 307, 324 |
| 15. | முழுமைத் திட்டம் | 15 | 305, 308/1b, 308, 309, 314, 306/3, 314/1, 314, 314/1b, 322/1,2, 175, 312, 308/1, 187/2, 187, 320/2, 320, 308, 308/2, 493, 493/1A, 308/1, 312, 313, 313/2, 318, 318/1, 321, 312 |
| 16. | முழுமைத் திட்டம் | 16 | 590/1A1Ab, 304, 311, 308, 305, 309, 308, 308/1 |
| 17. | முழுமைத் திட்டம் | 17 | 308, 309, 314/1B, 280/2b, 321/1AB, 328/1A1B, 228/1A, 327/1B, 274, 275, 328/1A, 333, 333/1B, 275/2, 313, 313/4, 335/1, 270/1, 335, 268, 273, 273/4, 270, 333, 333/1b, 275/2, 313, 314/4, 335, 270, 328, 328, 328/1b, 270. 328, 328/1b, 270/1,2,4, 275, 32, 322, 322/1, 326/4, 204/1, 204, 260, 313/2,1, 307, 307/4, 319, 315, 282, 313, 326, 326/4, 175, 314/4, 314, 327/2b, 327, 327/5,7, 545/2, 310, 308/1, 308, 194, 545, 327/5, 327/2, 265, 270, 270/2a, 326/4b2, 322, 60/2, 327/1, 194, 213, 225, 327, 272/2, 272, 270/3, 327/4, 322/2, 275, 275/1, 273, 129, 318 |
| 18. | முழுமைத் திட்டம் | 18 | 313, 322, 327, 280/2, 280, 301, 302, 302/b, 505, 505/2p, 518, 318/1, 282, 282/2a1, 318/1, 318, 319, 320 |
| 19. | முழுமைத் திட்டம் | 19 | 590/1A1AB, 289/1,2, 290, 300, 302/b, 282, 282/2A, 119, 293, 301, 361, 361/3, 292, 302, 283, 283/2A, 293, 109, 269 |
| 20. | முழுமைத் திட்டம் | 20 | 569, 590/1A1Ab, 590/1A1A1 |
| 21. | முழுமைத் திட்டம் | 21 | 590/1A1AB, 590/1A1A1 |
| 22. | முழுமைத் திட்டம் | 22 | 175/B, 590/1A1A |
| 23. | முழுமைத் திட்டம் | 23 | 175B, 187/2, 175, 176, 176/1, 273 |
| 24. | முழுமைத் திட்டம் | 24 | 145/4, 182/4, 183/2, 185/2, 186/2, 187/2, 175b, 590/1A1Ab, 590/1A1Ab, 187/2D, 186/3, 186, 181, 182, 179, 1048, 1049, 1047, 177, 98, 187/2B1, 187, 190, 190/3A, 188/1, 188, 175, 182/5,6, 148/3, 148, 204, 148/2, 187/2, 190, 190/3A3, 170, 187/2, 149/3, 48/2 |
| 25. | முழுமைத் திட்டம் | 25 | 25b, 144, 143, 143/1, 176/1, 176, 206, 175, 177, 177p, 145, 140, 140/2, 140/1A, 147 |

| | | | |
|---|---|---|---|
| 26. | முழுமைத் திட்டம் | 26 | 175b, 113/1, 116/2A, 114/1, 113/1b, 175, 176, 113/2, 268, 562, 262/3, 113, 176/1, 114, 140, 176/1, 206, 113/2, 174, 294, 294/2 |

**அலுவலகக் குறிப்பு:–** **சின்னமனூர் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தொடர் கட்டுமான பகுதிகளாக கண்டறியப்பட்ட சர்வே எண்கள் விவரங்களை மேற்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளபடி தொடர் கட்டுமான பகுதி (CBA) விவரங்களை நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்ப மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.0775/2019/எப்1)**

**தீர்மான எண், நாள்** **627 , நாள்.08.03.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.13**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் **2019,** விதி எண்.**30(2)**ல் குறிப்பிட்டபடி ஒவ்வொரு நகராட்சி பகுதிகளிலும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதிகளை (EWS) கண்டறியப்பட்டு, அப்பகுதிகளில் சர்வே எண்கள் மற்றும் தேவையான விவரங்களுடன் தயார் செய்து **08.03.2019**க்குள் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பும்படி தெரிவித்து வந்துள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் **05.03.2019** ஆம் தேதிய ந.க.எண்.**31159/2018**/டிபி**3** சுற்றறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், கீழ்க்கண்ட பட்டியல் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதிகள் (EWS)**

| **வ.எண்** | **அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்/ முழுமைத் திட்டம்** | **நகரளவு வார்டு எண்.** | **சர்வே எண்கள்** |
|---|---|---|---|
| 1. | முழுமைத் திட்டம் | 2 | |
| 2. | முழுமைத் திட்டம் | 4 | 342/1,2,3,4, 343/4, 7, 344pt, 563/1, 3, 324pt, 336/1, 2a, 2b, 3, 325pt, 337/1,2,3, 3pt, 335/1apt, 326/1pt, 338/1pt, 2pt, 341/1pt, 4pt, 2b pt, 313/6, 313/2,3, 322/1a, 1b, 313/6 |

**அலுவலகக் குறிப்பு:–** **1. சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதிகளை கண்டறியப்பட்டு அவற்றின் சர்வே எண்கள் விவரங்களை மேற்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளபடி, பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதியாக அறிவிப்ப மன்றம் அனுமதி அளிக்கலாம்.**

**2. ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதி எண்.30(2)ன் படி மாவட்ட அரசிதழில் பிரசுரிக்கலாம். அதற்கான செலவுத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளலாம்.**

**தீர்மான எண், நாள்** **628 , நாள்.08.03.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.14**

இந்நகராட்சியில் கட்டிட வரைபட வரைவாளராக பதிவு செய்து உரிமம் வழங்கும்படி கோரி விண்ணப்பம் செய்துள்ளனர். சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.50977/2018/டிபி3, நாள்.07.03.2019–ன்படி தகுதி உடையவர்களை பதிவு பெற்ற வரைபட வரைவாளர்களாக நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் Screening Committee கீழ்க்கண்ட நகராட்சி அலுவலர்களை கொண்டு அமைக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி

1. ஆணையாளர்
2. நகராட்சி பொறியாளர்
3. நகரமைப்பு ஆய்வாளர்

மேற்குறிப்பிட்ட அலுவலர்களை நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.0775/2019/எப்1)**

**தீர்மான எண், நாள்** **629 , நாள்.08.03.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******